# பரீட்சகரின் அறிக்கை

**மட்டம் II பரீட்சை – 2025 சனவரி**

## (203) வணிகச் சட்டம்

இந்த வினாத்தாள், (203) வணிகச் சட்டம் - 2025 சனவரி பரீட்சை ஆனது 07 கட்டாய வினாக்களை உள்ளடக்கியதாக **பகுதி A, பகுதி B, பகுதி C** என மூன்று பகுதிகளாகக் காணப்பட்டது. இந்த வினாத்தாளானது மொத்தத்தில் பரீட்சார்த்தியின் வணிகச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

மதிப்பீட்டுச் செயன்முறையின்போது அவதானிக்கப்பட்ட பொதுவான விடயங்கள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன :

## பகுதி - A

### வினா இல. 01

இந்த வினா 25 புள்ளிகளுக்காக 14 பகுதிகளைக் கொண்டிருந்தது.

இவ்வினாவுக்கு அதிகளவானவர்கள் விடையளித்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் அரைவாசிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் வினா இல. **1.9, 1.11, 1.12, 1.13** ஆகியவற்றுக்கு விடையளிக்கத் தவறியிருந்ததை அவதானிக்க முடிந்தது. பல பரீட்சார்த்திகள் அடிப்படை உரிமை தொடர்பான வழங்குகளின் அதிகார வரம்பு, வெற்றுப் புறக்குறிப்பிடல், மாற்றுண்டியல், சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள், CIF உடன்படிக்கை போன்றவற்றில் போதுமான அறிவைக் கொண்டிருக்கவில்லை.

பரீட்சார்த்திகள் **பகுதி A** இற்கு கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நீதித்துறை நியாயாதிக்கம், பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம், ஒப்பந்தச் சட்டம், சர்வதேச வர்த்தகச் சட்டம், மாற்றத்தகு சாதனங்கள் போன்றவற்றில் சிறந்த அறிவைக் கொண்டிருக்க வேண்டும். இது சித்திப் புள்ளியை அடைவதற்கு பெருமளவில் பங்களிப்புச் செய்யும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி - B

### வினா இல. 02

இது காப்புறுதிச் சட்டம் தொடர்பான ஓரளவு இலகுவான வினாவாகும்.

**(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் காப்புறத்தத்தக்க நாட்டக் கோட்பாட்டை இனங்கண்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் காப்புறுத்தத்தக்க நாட்டம் இல்லையாயின், வலிதான காப்புறுதி ஒப்பந்தம் இருக்காது என்பது பற்றிய போதுமான அறிவைக் கொண்டிருக்கவில்லை.

ஆயுள் காப்புறுதியில், ஒருவரின் இறப்பு காரணமாக இன்னொரு நபர் நிதி இழப்புக்கு உட்படுவாராயின், அந்த நபர் காப்புறுத்தத்தக்க நாட்டத்தைக் கொண்டிருக்கிறார் என்பதுடன் கடன்பட்டோரின் ஆயுள் மீது கடன்கொடுத்தோர் காப்புறுத்தத்தக்க நாட்டத்தைக் கொண்டிருக்கிறார். இதனை குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் ஏற்பிசைவு செய்யவில்லை.

**(b)** **(i), (ii)** ஆகியவை வட்டி தொடர்பாகத் தரப்பட்ட பதங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்ட ஒரு நேரடியான கோட்பாட்டுரீதியான வினாக்கள் ஆகும். பல பரீட்சார்த்திகள் அதியுயர் நம்பிக்கை மற்றும் நெருங்கிய காரணம் ஆகியவற்றை இனங்கண்டிருந்ததுடன் நன்றாக விடையளித்துப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 03

இவ்வினா புலமைச்சொத்துச் சட்டம் மற்றும் பணச் சலவைச் சட்டம் ஆகியன பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. இது நேரடியான கோட்பாட்டு ரீதியான வினாவாகும்.

**(a)** இந்தப் பகுதி பண்டக் குறி பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் பதிவு செய்யப்பட்ட பண்டக்குறி ஒன்றின் உரிமையாளர் அனுபவிக்கும் உரிமைகளை இனங்கண்டிருந்தனர்.

**(b)** இந்தப் பகுதி காப்புரிமைச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் காப்புரிமையற்ற புத்தாக்கங்கள் மீதான பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் காப்புரிமைச் சட்டம் பற்றிய சரியான புரிதலைக் கொண்டிருக்காது சம்பந்தமற்ற விடைகளை அளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

**(c)** இந்தப் பகுதி, பணச் சலவைத் தடுப்புச் சட்டம் பற்றியும் பணச் சலவைத் தடுப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டவிரோதச் செயற்பாடுகளை இனங்காண்பது பற்றியும் பரீட்சித்திருந்தது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 04

இந்த வினா பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டம் தொடர்பானதாகும்.

**(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் ‘‘பொருள்கள் விபரணத்திற்கு ஏற்ப இருக்க வேண்டும்’’ என்பதற்கான உட்கிடை நிபந்தனையை இனங்கண்டிருந்தனர். ஆயினும், மாணவர்கள் பொருள்களின் நேரடி விற்பனை கட்டளைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, அவர்களுடைய விடைகளை எழுத வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் நுகர்வோர் அலுவல்கள் சட்டம், அடிப்படை உரிமைகள் போன்ற சட்டச் சூழலை அடிப்படையாகக் கொண்டு அவர்களது விடைகளை எழுதியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

**(b)** பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட உட்கிடை வாசகங்களை அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாகக் குறிப்பிட்டு முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 05**

இவ்வினா தொழிற் சட்டங்களுடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான வினாவாகும்.

**(a)** பல பரீட்சார்த்திகள் ஊழியருக்கும் சுயாதீன ஒப்பந்ததாரருக்கும் இடையிலான வேறுபாடு பற்றிய அறிவைக் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்ததுடன் அவர்களால் அளிக்கப்பட்ட விடைகளும் திருப்தியான மட்டத்தில் காணப்பட்டன. அதிகமானவர்கள் தொழிற் சட்டத்தைப் பயன்படுத்தி, சோதனை முறைகளின் அடிப்படையில் விடைகளை முறையாகக் கட்டமைத்திருந்தனர்.

**(b)** அதிகமான பரீட்சார்த்திகள் சிறந்த புரிதலுடன் இப்பகுதிக்கு விடை அளித்திருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் EPF, ETF, மற்றும் பணிக்கொடையை அடையாளங் காண்பதில் குழப்பமடைந்திருந்தனர். எனவே, அவர்களால் ETF இன் பிரதான தொழிற்பாடுகளை தெளிவாகக் குறிப்பிட முடியவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 06**

இது கம்பனிகள் சட்டத்துடன் தொடர்புடைய சவால்மிக்க வினா ஒன்றாகும்.

**(a)** இந்தப் பகுதி அமைப்பக விதிகள் பற்றிய அறிவையும் கம்பனியின் நோக்கத்தையும் பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகளையும், கம்பனியில் ஏற்படும் பிணக்குகள் மற்றும் தீர்ப்பாயம் ஊடான அவற்றுக்கான தீர்வுகள் போன்றவற்றையும் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு முழுப் புள்ளிகளையும் பெறத் தவறியிருந்தனர்.

பரீட்சார்த்திகள் கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 188, 17(3) இற்கு இணங்க இந்த வினாவுக்கு விடையளிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் வரம்பு மீறிய கோட்பாட்டினை அடையாளங் காண்பதற்கு பல பரீட்சார்த்திகளுக்கு கஷ்டமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் சம்பனிகள் சட்டத்தின் கீழான பணிப்பாளர்களின் கடமைகள் பற்றிய அறிவைக் கொண்டிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி - C

**வினா இல. 07**

இவ்வினா 2 பகுதிகளைக் கொண்டிருந்தது.

**பகுதி (A)**

இப்பகுதி ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் விருப்பறிவிப்பை வரையறுத்தல், விருப்பறிவிப்பை தொடர்பாடுதல் போன்ற கோட்பாட்டு ரீதியான அம்சங்கள் பற்றி சரியாக விடை அளித்திருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு சரியாக விடை அளித்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஒப்பந்தச் சட்டத்தின் தபாலிடல் விதியின் பிரயோகத்தை அடையாளங் கண்டிருந்தனர்.

**(c)** அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்கு சரியான விடை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் பொதுமக்களால் மேற்கொள்ளப்படும் ஒருதலைப்பட்சமான ஒப்பந்தங்கள், அத்தகைய பணிகளை ஆற்றுவதன் மூலமான ஏற்பனவு ஆகியவற்றை இனங்கண்டு, விடை அளித்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

**<u>பகுதி (B)</u>**

இந்தப் பகுதி முகவராண்மைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் முகவர் ஒருவரின் கடமைகள் பற்றி போதுமான அறிவைக் கொண்டிருந்ததுடன் வினாவுக்கு நன்றாக விடையும் அளித்திருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்ததுடன் விடைகளும் திருப்தியான மட்டத்தில் அமைந்திருந்தன.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது..**

மொத்தத்தில் இந்த வினாத்தாளுக்கான செயலாற்றுகை சிறப்பாக இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் முழு வினாத்தாளுக்கும் சராசரிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். குறைந்த புள்ளிகள் ஒதுக்கப்பட்ட வினாக்களுக்கு, பரீட்சார்த்திகளின் விடைகள் நீண்டதாக அமைந்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பகுதியிலும் அதிகமான அறிவைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் வினாத்தாளில் தரப்பட்ட வழிகாட்டல்களையும் பின்பற்றுதல் வேண்டும். அத்துடன் பரீட்சார்த்திகள் வினாவுக்கான விடையாக அவ்வினாவையே திரும்ப எழுதுவதைக் காணக்கூடியதாக இருந்தது. இதனை அவர்கள் முற்றாகத் தவிர்த்தல் வேண்டும்.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள் :</u>**

(1) பாடத்திட்டத்தை முழுமையாகப் படிப்பதுடன் அடிக்கடி கேட்கப்படும் பாட விடயங்களில் விசேட கவனம் செலுத்தவும்.

(2) வினாக்களை கூர்ந்து வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும்.

(3) வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரல் வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs) தவிர்நத ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்திற்கு ஏற்ப வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

(4) சுய கற்றல் புத்தகம், மேலதிக புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் தொடர்புடைய ஏனைய வேறு விடயங்களையும் கற்றுக் கொள்ளவும்.

(5) ஆற்றல்களைக் கட்டியெழுப்புவது சரியாக இனங்காண்பதற்கு அவசியமானதாகும். வினாத்தாளுக்கு விடையளிக்கும்போது அடிப்படைக் கோட்பாடு ரீதியான எண்ணக்கருக்களை ஒப்பீடு செய்யவும்.

(6) கையெழுத்து தெளிவாக எழுதப்படுவதையும் வினா இலக்கங்கள் சரியாக இடப்படுவதையும் உறுதி செய்யவும்.

(7) வினாத்தாளில் தரப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

(8) கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையளித்து, பரிந்துரைக்கப்பட்ட விடைகளுடன் ஒப்பீடு செய்வதன் மூலம் நடைமுறை அனுபவத்தை மேம்படுத்திக் கொள்ளவும்.

(9) சரியான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

(10) விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்களும் சுட்டிலக்கமும் சரியாக எழுதப்பட்டுள்ளனவா என்பதை மீளவும் பரீட்சித்துக் கொள்ளவும்.

(11) முன்னாயத்தத்துடனும், பரீட்சையில் சித்தியடையும் உறுதியுடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -